# அன்புள்ள ஜெயலலிதா அவர்களுக்கு

**வணக்கம்**

நீங்கள் மட்டும் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையாளர் ரஷீதா பகத்திற்கு பேட்டி தராமல் இருந்திருந்தால், இந்தக் கடிதத்தை எழுதியே இருக்கமாட்டேன். ஒரு பெருந்தோல்வி அடைந்த வெறுப்பில் எரிச்சலில் தனிமையில் சிறிது காலம் ஓய்வெடுக்கட்டும், பிறகு உங்கள் மனம் நிதானமடைந்ததும் உங்கள் அடுத்த அரசியல் நடவடிக்கையின் அடிப்படையில் விமர்சிக்கலாம் என்று கருதியிருந்தேன்.

நெருக்கடியும் தோல்வியும் வந்தால் மனச்சோர்வு ஏற்படுவது மனித இயல்புதான். அண்ணாகூடத்தான் தேர்தலில் தோற்றதும் ஒரு முறை பெங்களூருக்கு ஓய்வெடுக்கப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். எட்டு வருடங்களுக்கு முன்னால் நீங்களே கூட பத்திரிகையாளர் ப்ரிதீஷ் நந்தியிடம் சொல்லியிருக்கிறீர்கள் - எந்தப் பெண்ணுக்கும் - அவள் எவ்வளவு உறுதியானவளாக இருந்தாலும், மிகுந்த துயரமான தருணங்களில், தற்கொலை செய்துகொள்ளத் தோன்றுவது இயற்கையானது. அப்படி எனக்கு அடிக்கடி நடக்கிறது என்றீர்கள்.

இந்த முறை உங்களுக்கு ஏற்பட்ட அந்த மாதிரி ஒரு தருணத்தில் - நீங்கள் தற்கொலை செய்துகொள்ளவில்லை; ரஷீதா பகத்தை சந்தித்துள்ளீர்கள்.

இதுவும் ஒரு தற்கொலைதான். அரசியல் தற்கொலை! எக்ஸ்பிரசில் வெளியான உங்கள் பேட்டியை உங்கள் கட்சியே மொழிபெயர்த்து தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது. அதைப் படித்ததும் - என்னவென்று சொல்வது? ஒரு பக்கம் நீங்கள் திருந்தவே மாட்டீர்களா என்று தோன்றுகிறது. இன்னொரு பக்கம் - உங்களை அழித்துக் கொள்வதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. மறுபக்கம்,

தன்னைத் தானே ஒரு சிறையில் வைத்துப் பூட்டிக்கொண்டு சாவியை வெளியே தூக்கி எறிந்துவிட்ட ‘அடிமைப் பெண்’ணாக நீங்கள் தோன்றுகிறீர்கள்.

தேர்தல் முடிவு வந்த இரண்டாம் நாளே, ‘மக்கள்தான் உண்மையான எஜமான்கள். அவர்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறேன்’ என்று அறிக்கை விட்டீர்கள். இப்போது தேர்தலில் தில்லுமுல்லு நடந்துவிட்டது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறீர்கள். ‘உண்மையான எஜமான்கள்’ என்ன ஆனார்கள்?

உங்கள் பேட்டியில் நீங்கள் கூறியிருக்கிற குற்றச்சாட்டுகள் எல்லாம் எவ்வளவு அபத்தமானவை என்று ‘உண்மையான எஜமான்கள்’ சிரிக்கிறார்கள். இவ்வளவு மரண அடியாகத் தோற்றுவிட்டதால் உங்களிடம் ஏற்பட்ட கொஞ்சநஞ்ச அனுதாபத்தைக் கூட மொடக்குறிச்சியில் பயன்படவிடாமல் தொலைத்துவிட்டீர்கள்!

தில்லுமுல்லுக்கும் காரணம் சேஷன் என்கிறீர்கள். தேர்தல் நேர்மைக்குக் காரணம் சேஷன் என்கிறது தேசம்! அவர் உங்களிடம் ஆலோசகர் பதவி கேட்டார். உங்களை அவர் பிரதமராக்கினால் அவரை நீங்கள் உள்துறை அமைச்சராக்கவேண்டுமென்று பேரம் பேசினார் என்றெல்லாம் 1991,1993 ‘நிகழ்ச்சிகளை’ இப்போது பேசுகிறீர்கள். நீங்கள் ஏன் இந்த விஷயங்களை உச்சநீதிமன்றத்தில் கொடுத்த வழக்கில் தெரிவிக்கவில்லை? சேஷனின் வழக்கறிஞர் சுப்பிரமணியன் சுவாமியின் மனைவி என்பதால், சுவாமி உங்கள் மீது தந்த புகாரை, சேஷன் விசாரிக்கக்கூடாது என்று மட்டும்தானே சொன்னீர்கள்? பேரங்கள் பற்றி இப்போது மட்டும் பேசுவது ஏன்?

வாக்கு எண்ணிக்கையை ஏன் எட்டாந் தேதி வரை தள்ளி வைத்தார்கள்? தில்லுமுல்லு செய்யத் தனே என்று கேட்கிறீர்களே? ஓட்டுப் போடும் நாட்கள் 27,2, எண்ணுவது 8ந் தேதி என்ற அறிவிப்பு ஒருமாதத்துக்கு முன்பாகவே செய்யப்பட்டதே! அப்போதே அ.தி.மு.க. சார்பில் ஆட்சேபணை தாக்கல் செய்திருக்கலாமே? மூன்றாந் தேதியே எண்ணவேண்டுமென்று முன்கூட்டியே வழக்கு தொடுத்திருக்கலாமே?

பர்கூர் தொகுதியில் வாக்கு எண்ணிக்கை தொடங்காத போதே, ரபி பெர்னார்ட் விஜய் டி.வி.யில் நீங்கள் மூவாயிரம், பிறகு ஏழாயிரம் வாக்குகள் என்று பின்தங்கி விட்டதாகச் சொன்னார். நீங்கள் எத்தனை வாக்கு வித்தியாசத்தில் தோற்க வேண்டும் என்பதெல்லாம் கூட முன்கூட்டி திட்டமிட்டு மோசடி நடந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் என்று கூறியிருக்கிறீர்கள்.

அன்றைய தினம் ரபி மட்டுமல்ல எல்லா சேனல்களுமே பர்கூர் பற்றித் தவறான தகவல் கொடுத்தார்கள். காரணம் அங்கிருந்து அதிகாரபூர்வ தகவல் சரியாக வராததுதான்.

உங்கள் வளர்ப்பு மகனின் சகோதரர் நடத்தும் ஜெ.ஜெ.டிவியில் அன்றைய தினம் அ.தி.மு.க. எல்லா தொகுதிகளிலும் பிந்தங்கியிருந்த போதே, நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் முன்னணியில் இருப்பதாக அறிவித்தார்களே - அதற்கு என்ன அர்த்தம் தர முடியும்? அங்கெல்லாம் நீங்கள் தில்லுமுல்லு செய்ய திட்டமிட்டிருந்தீர்கள் என்று சொல்லிவிட முடியுமா?

உங்கள் பேட்டி முழுவதும் இப்படிப் பல விஷயங்கள் கோளாறாக இருக்கின்றன. தேர்தல் நேர வன்முறை, முடிவு வந்த பின் வன்முறை என்றெல்லாம் தி.மு.க. மீது குற்றஞ்சாட்டியிருக்கிறீர்கள். ரஷீதா நினைவுபடுத்தாவிட்டாலும், உங்களுக்கே அந்த நேரங்களில் விஜயனும், சண்முகசுந்தரமும், தாஜ் ஓட்டலும், சந்திரலேகாவும் மனதில் தோன்றவில்லையா? உச்சநீதிமன்றம் தலையிடும்வரை அத்தனை வழக்குகளும் தாமதமாக, விசாரணை முடக்கப்பட யார் காரணம்?

சசிகலா உங்கள் சகோதரி; உற்ற நண்பர்; உங்கள் வீட்டுப்பணிகளைப் பார்த்துக்கொள்பவர்; அவ்வளவுதான், அவருக்கும் அரசுக்கும் கட்சிக்கும் தொடர்பு இல்லை; அவர் கோட்டைக்கும் வந்ததில்லை; லாயிட்ஸ் சாலை கட்சி அலுவலகத்திற்கும் வந்ததில்லை; கட்சிக்காரர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ எந்த உத்தரவும் பிறப்பித்தது இல்லை; ஏன் அநாவசியமாக சசிகலாவையும் அவர் குடும்பத்தையும் பத்திரிகைகள் இழுக்கின்றன என்று ஆணித்தரமாகக் கேட்டிருக்கிறீர்கள்.

உங்கள் இல்ல நிர்வாகியாக, தோழியாக, சகோதரியாக மட்டும் அவர் இருப்பதை யாருமே ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அப்படியில்லை என்று ஐந்தாண்டுகளில் ஏராளமான செய்திகள் வந்திருக்கின்றன. நீங்களும் அவரும் உரிமையாளராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷன், அரசு நிறுவனமான டான்சி நில வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறது. அந்த கம்பெனிக்கு கட்சி நிதிக் கணக்கிலிருந்து பணம் மாற்றப்பட்டிருக்கிறது. அரசும், கட்சியும் சசிகலாவோடு இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டுவிடவில்லையா?

சசிகலா குடும்பத்தினர் வியாபாரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதற்கு உரிமை கிடையாதா என்று கேட்டிருக்கிறீர்கள். முழு உரிமை உண்டு.

*அவர்களைப் பற்றியும் சசிகலாவைப் பற்றியும் எழுதுகிற சர்ச்சைகளுக்கெல்லாம் நீங்கள் மிக மிகச் சுலபமாக முற்றுப் புள்ளி வைத்து விடலாமே!*

*பத்தாண்டுகளுக்கு முன்னால் சசிகலாவும், அவரது நெருக்கமான உறவினர்களும் சம்பாதித்த வருவாய் எவ்வளவு? புதிதாகத் தொடங்கிய தொழில்கள் எவையெவை? முதலீட்டுக்கு என்ன செய்தார்கள்? பத்தாண்டு முன்பு ஆண்டு வருமானம் என்ன? இப்போது என்ன? என்று எல்லா விவரங்களையும் வெளியிட்டுவிடலாமே? நீங்களாவது 1964-லிருந்து 1974 வரை பத்தாண்டு காலம் லட்சக்கணக்கில் சம்பாதிக்கிற திரைப்படத்துறையில் உழைத்திருக்கிறீர்கள். உங்களுடைய புதிய குடும்பத்தினர் சாதாரண மனிதர்களாக இருந்தவர்கள்தானே. முதல் பக்கத்திலேயே தினமணி, சசிகலாவுக்கு சொந்தமான கம்பெனிகள், அவற்றுக்கு வங்கியில் உள்ள தொகை விவரங்கள் என்று ஒரு பட்டியலை வெளியிட்டது. அதை மறுத்து ஒரு வார்த்தைகூட உங்கள் தரப்பிலிருந்து வரவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் வெளிநாட்டிலிருந்து உங்களுக்கும் சசிகலாவுக்கும் பரிசுத் தொகைகள் வந்ததாக வரிக்கணக்கில் தெரிவித்திருக்கிறீர்கள். அவற்றைத் தந்தவர்கள் யார் என்று ‘உண்மையான எஜமான்’களுக்குத் தெரியவேண்டாமா? பொது வாழ்க்கையில் இருக்கிறபோது இவற்றைத் தெரிவிக்க மாட்டேன் என்று எப்படி நீங்கள் மறுக்க முடியும்? பத்து வருடக் கணக்கைப் பட்டியிலிட்டு, விமர்சிக்கிற ப.சிதம்பரம், அமலாக்கத்துறை அதிகாரிகள், வருமானவரி அதிகாரிகள் எல்லாரையும் அம்பலப்படுத்தலாமே! ஏன் செய்யக்கூடாது?*

*கிரிமினல் குற்றவாளியான சந்தன வீரப்பன் பேட்டியை சன் டி.வி. ஒளிபரப்பலாமா? ஜெ.ஜெ.டிவி. அப்படிச் செய்ய முற்பட்டிருந்தால் அவர்களிடம் வீரப்பனைப் போலீசிடம் ஒப்படைக்கச் சொல்லியிருப்பேன் என்று சொல்லுகிறீர்கள். அதே சமயம் அந்நிய செலாவணி மோசடிக்காக ஜெ.ஜெ.டிவி, மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால், ராஜ் டி.வி., விஜய் டி.வி., சன் டி.வி. எல்லாரும் அதே தானே செய்கிறார்கள் என்று வாதாடுகிறீர்கள்.*

*ஜெ.ஜெ.டிவி. மீதான மத்திய அரசின் நடவடிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று நீங்கள் சொன்னதும், அப்படியுமா நரசிம்மராவ் உங்களுடன் கூட்டணி வைக்க முன்வந்தார் என்று நிருபர் கேட்டிருக்கிறார். ஏனென்று ராவிடம் போய்க் கேளுங்கள் என்று பதில் சொல்லிவிட்டீர்கள்.*

*நீங்கள் தானே பதில் சொல்ல வேண்டும்? உங்கள் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியில் நடவடிக்கை எடுக்கிறவருடன், அவராகவே*

முன்வந்தால் கூட, உறவு வேண்டாம் என்று ஏன் நீங்கள் சொல்லவில்லை? நீங்கள் தானே இதை விளக்க முடியும்?

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். நீங்கள் எக்ஸ்பிரசுக்கு கொடுத்த பேட்டி, உங்கள் அரசியல் எதிரிகள் கூட செய்யமுடியாத வேலையைச் செய்திருக்கிறது. உங்களுக்கு எதிராக நீங்களே பணியாற்றி-யிருக்கிறீர்கள்.

வெற்றி தோல்வி மாறிமாறி வருவது வாழ்க்கையில் இயல்பு என்று தத்துவார்த்தமாகப் பேசத் தெரிந்த நீங்கள் அதற்கேற்ப நிதானம் இல்லாமல் உங்கள் தவறுகளையெல்லாம் நியாயப்படுத்தப் பார்க்கிறீர்கள். காலில் விழுகிற விஷயத்தில் கூட எனக்கும் பிடிக்கவில்லை. ஆனால் நான் ஒரு பெண், எப்படி விழுகிற ஆண்களைத் தொட்டுத் தடுப்பது என்று குழந்தைத் தனமாகச் சொல்லியிருக்கிறீர்கள். யாரும் காலில் விழக்கூடாது என்று நீங்கள் ஒரே ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கலாமே! வெளியிட்டதில்லையே?

தோல்வியின் உச்சத்தில் எதிர்காலம் பற்றிய அச்சத்தில் முன்யோசனை ஏதும் இல்லாமல் கொடுத்த பேட்டியாக உங்கள் பேட்டி இருக்கிறது.

உங்களைச் சுற்றி நீங்களே அமைத்துக் கொண்ட வேலிகளைத் தாண்டி வாருங்கள். உண்மைகள் புரியும்.

உங்கள் முன்னால் இப்போது இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று அரசியலிலிருந்து விலகிக்கொள்வது.

விலகிக்கொள்ளுங்கள் என்று நீ யார் சொல்வது என்று எரிச்சலடையாமல் சிந்தித்துப் பாருங்கள். 'அரசியலுக்கு வரவேண்டும் என்று நான் விரும்பியதே இல்லை' என்று நீங்களே பலமுறை தெரிவித்திருக்கிறீர்கள். 'என் வாழ்க்கையில் நடந்த எதுவும் நான் திட்டமிட்டு நடந்ததுல்லை' என்று எக்ஸ்பிரஸ் பேட்டியில் கூடச் சொல்லியிருக்கிறீர்கள்.

மற்றவர்கள் உங்கள் வாழ்க்கையைத் திட்டமிடுகிற நிலையிலிருப்பது சரியாகுமா? திரைப்படம், அரசியல் என்று எல்லாவற்றிலுமே உங்கள் அம்மா, எம்.ஜி.ஆர். என்று பிறர் நிர்பந்தத்தால் ஈடுபட்டிருக்கிறீர்கள். அப்புறம் உடன்பிறவா சகோதரி, வளர்ப்பு மகன் என்று எங்கிருந்தோ ஒரு புதிய குடும்பம் வந்துவிட்டது.

முதன் முறையாக உங்கள் வாழ்க்கையை நீங்களாகவே திட்டமிடுங்கள். அதற்குப் பொருந்தாதவற்றைத் தூக்கியெறியுங்கள். அரசியல் அதில் ஒன்றாக இருக்கும் என்றுதான் தோன்றுகிறது.

உங்களுக்கொன்றும் அப்படி வயதாகிவிடவில்லை. இன்னும் பல ஆண்டுகள் துடிப்புடன் செயல்பட முடியும். அந்த ஆண்டுகள் உங்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ளதாக செலவழிக்க வழி என்ன என்று யோசியுங்கள். உலகில் எத்தனையோ பேர் பாதி ஆயுளுக்குப் பிறகே தங்கள் வாழிக்கையையே மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறார்கள். பஸ் கண்டக்டராக இருந்த ரஜினி சூப்பர் ஸ்டாராகியிருக்கிறார்; கொள்ளைக்காரி பூலான் தேவி எம்.பி. ஆகி-யிருக்கிறார். அரசியல் பிரமுகர் ஜேப்பியார் கல்வியாளராகியிருக்கிறார். வாழ்க்கை எப்போதும் ஒரு கதவை மூடி மற்றொரு கதவைத் திறந்துகொண்டேயிருக்கிறது. தேவைப்படுவதெல்லாம் பழைய தளைகளிலிருந்து விடுபடும் வலிமையும், தவறுகளை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்ளும் பக்குவமும் தான்.

இரண்டாவது, தொடர்ந்து தீவிரமாக அரசியலில் ஈடுபடுவதாக முடிவு செய்தால், முதலில் உங்களை நீங்களே பூட்டிவைத்துக் கொண்டிருக்கிற சிறையிலிருந்து வெளியே வாருங்கள். கடந்த ஐந்தாண்டு காலப் பதவி மக்கள் மாபெரும் நம்பிக்கையுடன் உங்களுக்களித்தது. அதற்கு நியாயம் செய்தீர்களா என்று உங்கள் மனசாட்சியைக் கேட்டுப் பாருங்கள். எங்கே தவறு நடந்தது என்று உங்களுக்கே தெரிய வரும்.

தினமணியில் உங்களை விமர்சிக்கும் கார்ட்டூன் வெளியிடுவது பற்றிச் சொன்னபோது ரஷீதாவிடம், தினமணி ஆசிரியர் சுதாங்கன் என்று சொன்னீர்களாம். தமிழ்நாட்டின் முன்னிலை செய்தித்தாளின் ஆசிரியர் சுமார் ஒன்றரை ஆண்டு காலம் முன்பே மாறிவிட்டது தெரியாமலே நீங்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். இன்னும் என்னவெல்லாம் தெரியாமலே இருந்தீர்களோ என்று கற்பனை செய்யவே பயமாக இருக்கிறது.

ஐந்தாண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர், எம்.ஜி.ஆரின் கட்சியை அவர் இறந்து எட்டாண்டுக்குப் பிறகும் உயிரோடு வைத்திருக்கிற பெருமைக்குச் சொந்தம் கொண்டாடுகிறவர், தானே தேர்ந்துகொண்ட தனிமைச் சிறைக்குள் முடங்கியிருப்பது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல.

*நீங்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபடுவதாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒரு கூட்டுக்குள் முடங்கியிருப்பது உங்களுக்கே நல்லதல்ல.*

*‘வாழ்க்கையில் எதற்காகவும் வருத்தப்படாதே. எல்லாவற்றிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்’ என்று ஓர் ஆசிரியர் உங்களிடம் சொன்னதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள்.*

*உங்கள் பேட்டியிலேயே கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லாத ஒரே விஷயம் அது ஒன்றுதான்.*

*அன்புள்ள*

*ஞாநி*

***தினமணி கதிர்***
***19.5.1996***

# ஏவி.எம்.பொன்விழா! சர்ச்சைகள்

தமிழ் சினிமாவுக்கு ஏவி.எம்.மின் பங்களிப்பு என்ன? இதை மதிப்பிடுவதற்கு ஏவி.எம்.மின் ஐம்பதாண்டுப் பணிகளை மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கொள்வது வசதியாக இருக்கும்.

முப்பதுகள் முதல் அறுபதுகள் வரை ஓர் காலகட்டம். அறுபதிலிருந்து எண்பது வரை; பிறகு எண்பதுகளிலிருந்து இன்று வரை என்று பார்க்கலாம்.

ஏவி. மெய்யப்பச் செட்டியார் ஏவி.எம். நிறுவனத்தை 1945-ல் தொடங்கினாலும் 1935-லேயே முதல் படத்தைத் தயாரித்துவிட்டார்.

கே. சுப்பிரமணியம் போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்தான் முப்பதுகளிலேயே விடுதலைப் போராட்ட விஷங்களையும் காந்திய அடிப்படையிலான சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் தங்கள் படங்களில் வெளிப்படுத்தினார்கள்.

பெரும்பாலான படத் தயாரிப்பாளர்கள் அந்தச் சமயத்தில் பழைய புராணக் கதைகளையும் ராஜா ராணி கதைகளையுமே படமாக்கிக்கொண்டிருந்தார்கள். மெய்யப்பச் செட்டியாரும் அல்லி அர்ச்சுனா, ரத்னாவளி, நந்தகுமார், பூ கைலாஸ் என்று தான் எடுத்துக்கொண்டிருந்தார். மற்ற படத் தயாரிப்பாளர்கள் நாற்பதுகளின் ஆரம்பத்தில் சமூகக் கதைகளுக்கு மாறத் தொடங்கியபோது ஏவி.எம்.மும் சபாபதி, என் மனைவி போன்ற படங்களைத் தயாரித்தார்.

1945 வாக்கில் இரண்டாவது உலகப்போர் முடிந்த உடனே இந்தியவுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு ஆங்கிலேயர் வெளியேறப்போவது ஊர்ஜிதமாகிவிட்டது. 1946லேயே இதற்கான வழிமுறைகளைக் காங்கிரசுடனும், லீகுடனும் ஆங்கிலேய அரசு விவாதிக்க ஆரம்பித்துவிட்டது. சுதந்திரம் வரப்போகிறது என்பதும் அடுத்து காங்கிரஸ் அரசுதான் என்பதும் தெளிவாகிவிட்ட காலகட்டத்தில்தான்

ஏவி.எம். பாரதி பாடல்களை 'நாம் இருவர்' திரைப்படத்தில் (1947 ஜனவரி) பயன்படுத்தியது.

பாரதி பாடல்களை முதலில் தமிழ்த் திரைப்படத்தில் பயன்படுத்தியது ஏவி.எம். தான் என்றும் பிறகு தம்மிடமிருந்த பாடல் உரிமையைத் தாமாக முன்வந்து அரசுக்கு வழங்கி நாட்டுடைமையாக்கிய பெருந்தன்மையும் ஏவி.எம்முக்குரியது என்றும் பல்லாண்டுகளாகக் கூறப்பட்டுவருகிறது.

இவை உண்மையல்ல; கட்டுக்கதைகள். 1982-ல் பாரதி நூற்றாண்டின்போது ஏவி.எம் வெளியிட்ட எல்.பி. இசைத்தட்டு உறையில் பாடலாசிரியர் வைரமுத்து, பாரதியையும் மெய்யப்பச் செட்டியாரையும் சமமாக வைத்துப் போற்றி எழுதியதைக் கடுமையாக விமர்சித்து 'ஏவி.எம். + வைரமுத்து = பாரதி வியாபாரம்' என்ற தலைப்பில் திரைப்பட வரலாற்றாய்வாளர் அறந்தை நாராயணன் அப்போதே ஒரு கட்டுரை எழுதினார்.

அவர் தெரிவித்தத் தகவல்படி ஜூபிடர் சோமுவும் மொய்தீனும் தயாரித்து டி.கே. சண்முகம் குழுவினர் நடித்த 'மேனகா' படத்தில் 1935லேயே 'வாழிய செந்தமிழ்' பாடல் இடம் பெற்றுவிட்டது. 1940ல் மாடர்ன் தியேட்டர்ஸ் வெளியிட்ட பி.யு.சின்னப்பா நடித்த 'உத்தமபுத்திரன்' படத்தில் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' பாடல் ஒலிக்கிறது.

பாரதி பாடல்களுக்கான உரிமை 'நாம் இருவர்' படத் தயாரிப்பின்போது மெய்யப்பச்செட்டியாருக்குத் தேவைப்பட்டது. அந்த உரிமை அப்போது கராஜ்மல் அண்ட் சன்ஸ் என்று இசைத்தட்டுத் தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்தது. அதைப் பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கிக்கொண்டார்.

பாரதி பாடல்கள் தனியார் உரிமையாக இருக்கக் கூடாது என்று முதல் குரல் எழுப்பியவர் கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம். எட்டயபுரம் பாரதி விழாவில் 1947 அக்டோபரில் அவர் இதைப் பேசினார். முன்னதாக 'பில்ஹணன்' படத்தில் 'தூண்டிற் புழுவினைப் போல்' பாடலைப் பயன்படுத்த டி.கே. சண்முகம் அதைப் பதிவு செய்தார். மெய்யப்பச் செட்டியார், அதைப் பயன்படுத்தக்கூடாது; உரிமை தன்னிடம் உள்ளது என்று வக்கீல் நோட்டீஸ் அனுப்பியதை டி.கே.எஸ். 'எனது நாடக வாழ்க்கை' நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதி பாடலுக்கு எந்தத் தனிமனிதரும் உரிமை கொண்டாட முடையாது என்று டி.கே.சண்முகம், மெய்யப்பச் செட்டியாரின்

நோட்டீசுக்குப் பதில் அனுப்பினார். பிறகு வ.ரா., பரலி.சு.நெல்லையப்பர், தெ.பொ.மீ. நாராணதுரைக் கண்ணன், ப. ஜீவானந்தம், ரகுநாதன், வல்லிக்கண்ணன் கொண்ட குழு அமைக்கப்பட்டு பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்க முயற்சி எடுத்தது. பாரதி குடும்பத்தின் ஒப்புதலைப் பெற்றது. டி.கே.எஸ். இது பற்றி காமராஜரிடம் பேசினார். அதன் பிறகு அன்றைய முதலமைச்சர் ஓமத்தூர் ராமசாமி ரெட்டியார் மோட்டார் சைக்கிள் மெசஞ்சரை அனுப்பித் தன்னை வரவழைத்ததை மெய்யப்பச்செட்டியாரே தன் சுயசரிதையில் குறித்திருக்கிறார். உரிமையை அரசிடம் ஒப்படைத்தார்.

இவைதான் அறந்தை நாராயணன் ஆய்வு செய்து 1982லேயே வெளி-யிட்ட உண்மைத் தகவல்கள்.

1950களில் திரைப்படப் போக்கு முற்றிலும் சமூகப் படங்களை நோக்கி மாறியது. காங்கிரசுக்கு எதிரான திராவிட இயக்கம் தி.மு.க. வடிவில் பெரும் வளர்ச்சி பெறத் தொடங்கிய நேரம் ஏவி.எம். 1950-ல் அண்ணா கதை வசனத்தில் ‘ஓர் இரவு’ படத்தையும் 1952-ல் கலைஞர் கருணாநிதி வசனத்தில் ‘பராசக்தி’ படத்தையும் தயாரித்தது. இந்த இரண்டு தவிர திராவிட இயக்கக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் படங்களாக ஏவி.எம். வேறெதையும் தயாரித்ததில்லை. படத்துக்குப் படம் அரசியல் கருத்துக்களை வெளியிட்டு வந்த எம்.ஜி.ஆரை வைத்து தி.மு.க. ஆட்சியைப் பிடிப்பதற்கு ஓராண்டு முன்பு 1966ல் ஏவி.எம். தயாரித்த ஒரே படமான ‘அன்பே வா’ படத்தில் அரசியல் வாடையே கிடையாது. (முதன் முறையாக கிளைமாக்சில் கதாநாயகியின் பிரிவுக்காக எம்.ஜி.ஆர் உருகி அழுது பாடியது இந்தப் படத்தின் தனிச்சிறப்பு.)

ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் ஏவி.எம். தயாரித்த படங்கள் குடும்பப் படங்கள், பொழுதுபோக்குப் படங்கள் என்ற வரிசையில் இடம் பெற்றவை. 1954ன் அந்த நாள் முதல், பெண், குலதெய்வம், சகோதரி, தெய்வப்பிறவி, களத்தூர் கண்ணம்மா, திலகம், வீரத் திருமகன், அன்னை, நானும் ஒரு பெண், பச்சை விளக்கு, சர்வர் சுந்தரம், காக்கும் கரங்கள், குழந்தையும் தெய்வமும், அன்பே வா, ராமு, மேஜர் சந்திரகாந்த், அதே கண்கள், உயர்ந்த மனிதன், அனனையும் பிதாவும், எங்க மாமா, அனாதை ஆனந்தன், சுடரும் சூறாவளியும், பாபு என 1972ன் காசேதான் கடவுளடா வரை இத்தகைய படங்கள் தான்.

இந்தப் படங்களில் பல, உருக்கமான சம்பவங்கள் நிறைந்த குடும்பக் கதைகளாக இருந்தன. ஆடல் பாடல் மட்டும் பிரதானமாக உள்ள பொழுதுபோக்குப் படங்களும் இருந்தன. பராசக்தி, அந்தநாள் மாதிரி சற்று மாறுபட்ட படங்களுக்கான முதல் பெருமை ஏவி.எம்.மை விட

முறையே நேஷனல் பிக்சர்சுக்கும், எஸ். பாலசந்தருக்கும் உரியவை. பீம்சிங் படங்கள் எல்லாம் அவரது தயாரிப்புகள் தான். இவை வர்த்தக காரணங்களுக்காக இணைத் தயாரிப்புகளாக மேற்கொள்ளப்பட்டவை.

எழுபதுகளில் ஏவி.எம். மற்ற ஸ்டூடியோக்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய விஷயம் ஸ்டூடியோ தளங்களைக் கிடங்குகளாக மாற்றியதாகும். திரைப்பத் தொழிலாளர் பிரச்சினை தீவிரமானதையடுத்து பல ஸ்டூடியோ முதலாளிகள் தங்கள் அரங்கங்களைக் கல்யாண மண்டவங்களாகவும், மருத்துவமனையாகவும், கோடவுன்களாகவும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாகவும் மாற்ற ஆரம்பித்துவிட்டார்கள்.

1979-ல் மெய்யப்பச்செட்டியார் தன் 72-வது வயதில் காலமானார். அவர் முதல் படம் தயாரித்தபோது இருந்த திரைப்படச் சூழல் அவர் காலமான சமயத்தில் முற்றாக மாறியிருந்தது. மாதச் சம்பளக்காரர்களாக நடிகர்கள் இருந்ததிலிருந்து நட்சத்திரங்களாக மாறி, எம்.ஜி.ஆர் - சிவாஜி ஆதிக்க காலம் உருவாகி வளர்ந்து தேய்ந்து முடியும் வரை அவர் தொழிலில் இருந்தார்.

இரு பெரும் நட்சித்திரங்களின் ஆதிக்க காலம் முடிவடைந்த நிலையில் தமிழ் சிமிமாவில் புதிய மாற்றங்களுக்கு சற்று வாய்ப்பு உருவாகியிருந்தது. பாரதிராஜா, மகேந்திரன், பாலு மகேந்திரா, போன்று சிறிய பட்ஜெட்டில் வித்தியாசமான படங்களை எடுக்க முயற்சிக்கும் சிலர் அறிமுகமான நேரம்; அது வரை சுமார் ஏழெட்டு ஆண்டுகளாகத் தமிழ்ப் படமே தயாரிக்காமல் இருந்து வந்த ஏவி,எம். நிறுவனம் மறுபடியும் நட்சத்திர ஆதிக்கச் சூழல் ஏற்பட வழி வகுத்தது என்றே சொல்லலாம்.

ரஜினிகாந்தைக் கதாநாயகனாகவும், முன்னாள் கதாநாயகன் ஜெய்சங்கரை வில்லனாகவும் வைத்து ஏவி.எம். உருவாக்கிய ‘முரட்டுக்காளை’ 1981ல் வெளியாயிற்று. அடுத்த ஆறே ஆண்டுகளில் எட்டு மசாலாப்படங்கள் ஏவி.எம்மிலிருந்து வந்தன. இவை ரஜினி நடித்த ‘போக்கிரி ராஜா’, ‘ பாயும் புலி’, ‘நல்லவனுக்கு நல்லவன்’, ‘மிஸ்டர் பாரத்’, கமல் நடித்த ‘சகலகலா வல்லவன்’, தூங்காதே தம்பி தூங்காதே’, ‘உயர்ந்த உள்ளம்’, பாக்யராஜின் ‘முந்தானை முடிச்சு’ முதலியன.

இந்தப் படங்கள் தமிழ்த் திரையுலகம் மசாலாவிலிருந்து விலகும் போக்கு உருவாவதைத் துடைத்தெறிந்தன. சின்ன பட்ஜெட் படங்களுக்கான வாய்ப்பும் குறைந்தது. ரஜினி, கமல் இருவரும் ஸ்டார்களாக்கப்பட்டு அடுத்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஸ்டார்

ஆதிக்கப் போக்கு தொடர்ப்பட்டது. இந்தப் பதினாறு ஆண்டுகளில் ஏவி.எம்மின் வித்தியாசமான படங்கள் என்று கூறத்தக்கவை புதுமைப்பெண், சம்சாரம் அது மின்சாரம், தியாகு, பாட்டி சொல்லைத்தட்டாதே ஆகிய படங்கள் மட்டும் தான். இவைகூட ஐம்பது - அறுபதுகளின் குடும்பப் படங்களோடு ஒப்பிட்டால் வித்தியாசமானவை என்று கூற முடியாது.

ஏவி.எம்மின் ஐம்பதாண்டு தயாரிப்புகளில் தெரிய வருகிற முக்கிய அம்சம், அந்த நிறுவனத்துக்குள்ள கூர்மையான வர்த்தகத் திறமையாகும். காலத்துக்கேற்ப எது விற்பனையாகும் என்று கண்கிட்டுக் காரியமாற்றுவதில் ஏவி.எம். தவறு செய்ததே இல்லை என்றே சொல்லிவிடலாம். 1947-ல் பாரதி பாடல்கள், 1952ல் அண்ணா, கருணாநிதி வசனங்கள், 1960 களில் குடும்பக் கதைகள், சிவாஜி, ஜெமினி, பீம்சிங், கே. பாலசந்தர், 1980ல் ரஜினிகாந்த், கமல்ஹாசன், எஸ்.பி. முத்துராமன் என்று அந்தந்தக் காலத்தில் மக்கள் செல்வாக்குள்ள விஷயங்களையும் கலைஞர்களையும் சரியாகத் தேர்ந்தெடுத்து வந்திருக்கிறது.

எண்பதின் தொடக்கத்தில் தமிழகத்தில் நச்சல்பாரி இயக்கம், தீவிர இடதுசாரி உணர்வுகள் மேலோங்கிய போது அதையும் ஏவி.எம். கவனிக்கத் தவறவில்லை. காலத்துக்கேற்ப படமாக ‘சிவப்பு மல்லி’யைத் தயாரித்தது.

சினிமாத் துறையினர் பலர் தொலைக்காட்சியின் வருகையை எதிர்த்த சமயத்தில் அது காலத்தின் கட்டாயம் என்று ஏற்றுக்கொண்டு, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பிலும், தொழில்நுட்ப சாதனங்களை நிறுவுவதிலும் ஆரம்பத்திலிருந்தே ஏவி.எம் அக்கறை காட்டி வந்திருக்கிறது.

வர்த்தக சினிமாவின் சிறந்த பாரம்பரியமுள்ள அடையாளமாகத் திகழும் ஏவி.எம். அடுத்து என்ன செய்யும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

இன்று தமிழ் சிமிமாவின் பட்ஜெட் எண்பதுகளின் ஏவி.எம். பட்ஜெட்களைப் பல மடங்கு தாண்டிப் போய்விட்டது. பிரும்மாண்டம் என்று மிரட்டுகிறது.

ஹாலிவுட்டுக்குப் பறந்து செல்வதற்கு முன்னால் தமிழ் சினிமாவை முதலில் கொஞ்சம் தரையில் நடந்து பார்க்கச் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதற்கு ஏவி.எம். சில ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்யமுடியும்.

சினிமா, டி.வி. என்று இரு துறைகளிலும் தயாரிப்பில் ஈடுபடும் வசதி உள்ள ஏவி.எம். நிறுவனம் புதிய படப்பாளிகளைக்கொண்டு, கதைக்கும் திறமைக்கும் மட்டும் முக்கியத்துவம் தந்து, குறைந்த செலவிலேயே ஆண்டுக்கு ஒரு சினிமா, ஒரு டி.வி. தொடர் தயாரிக்கலாம்.

'சகலகலா வல்லவன்' மசாலாவுக்குப் பரிகாரம் செய்தாக வேண்டும் என்ற உணர்ச்சி கமலுக்கு ஓரளவு ஏற்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. பொன்விழா நேரத்தில் ஏவி,எம்முக்கும் அந்த உணர்ச்சி ஏற்பட்டால் மகிழ்ச்சியடையலாம்.

***தினமணி கதிர்***
***21.7.1996***

# மறுபடியும்

இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும்போது அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் நான்கு கோடி ரூபாய் பாதுகாப்புச் செலவில் கண்டுபிடித்த உலக 'அழகி' யார் என்பது தெரிந்து போயிருக்கும். அந்த 'அழகி'யின் அறிவுக் கூர்மைக்கு அடையாளமாக அவர் உதிர்த்த முத்து என்ன (உலக அமைதி/உடல் ஊனமுற்ற குழந்தைகள்/பிராணிகள் நலம்/இவற்றில் ஏதேனும் ஒன்றிற்காக பாடுபடுவதே என் வாழ்க்கை லட்சியம்) என்பதும் தெரிந்து போயிருக்கும்.

தரையில் ஒரு குழி கூட வெட்டாமல் 50 அடி உயரம் 88 அடி அகலத்துக்கு இரும்புக் கம்பிகளாலான மேடை அமைத்த சாதனை; உலகெங்கும் 20 கோடி டி.வி. பார்வையாளர்களுக்கு நேரடி ஒளிபரப்பு செய்வதற்காக 12 கேமராக்கள் கொண்ட வெளிப்புற ஒளிபரப்பு வேன் - செயற்கை கோள் இணைப்பு அமைத்த சாதனைஞ் 1996-ல் இருக்கிறோமா? ராஜீவ்காந்தியின் கனவான 21-ம் நூற்றாண்டைத் தாண்டி 22-ம் நூற்றாண்டுக்கே போய்விட்டோமா? என்று பிரமிக்க வைக்கும் 'சாதனை'ப் பட்டியல்களையும் பத்திரிகைகளில் படித்து முடித்திருப்பீர்கள்.

இல்லை இந்த 'அழகி'ப் போட்டி நம்மை அடுத்த நூற்றாண்டுக்கெல்லாம் அழைத்துப்போய்விடவில்லை.

மறுபடியும்-

நம்மை 18-ம் நூற்றாண்டுக்கே இழுத்துப் போகிறது என்பது தான் நிஜம்.

எப்படி என்பதைப் புரிந்து கொள்ள வசதியாக 'அழகி'ப் போட்டியை எதிர்த்தவர்களை எதிர்த்து அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் தன் பண பலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி 'அழகி'ப் போட்டிக்கு ஆதரவாக கடந்த ஒரு மாத காலமாகப் பரப்பி வந்த முக்கியமான கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கலாம்.

இதற்கு முன்னால் இந்தியாவில் அழகிப் போட்டிகள் நடந்ததில்லையா, இப்போது மட்டும் எதிர்ப்பானேன்? உலக அழகிப் போட்டி உலகளவில் சமத்துவத்தைத்தானே பரப்புகிறது? சுஷ்மிதாவும், ஐஸ்வர்யாவும் ஜெயித்த போது கொண்டாடினீர்களே, இப்போது நம்மூரில் நடத்தினால் ஏன் எதிர்க்கவேண்டும்? அழகிப் போட்டியில் இப்போது அறிவுக்கும் முக்கியத்துவம் இருக்கிறதே, அப்படியானால் ஆதரிக்கலாமே. அழகிப் போட்டி பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கிறதே, இதில் என்ன தவறு? சினிமாவிலும், டி.வி.யிலும் இல்லாத ஆபாசமா இதில் இருக்கிறது? இந்தியா எவ்வளவு நவீன வளர்ச்சியுள்ள நாடு என்று உலகத்துக்கு எடுத்துக்காட்ட இது நல்ல வாய்ப்பு, இதை நழுவ விடலாமா? அழகிப் போட்டி வருவாயிலிருந்து பெங்களூர் மனவளர்ச்சிகுன்றிய குழந்தைகள் அமைப்புக்கு (ஸ்பாஸ்டிக் சொசைட்டி) நன்கொடை தரப்படுவது நல்ல விஷயம் தானே?

இன்னும் பலவிதமான வாதங்கள் வைக்கப்பட்டாலும் எல்லாமே மேலே சொன்னவற்றுள் அடங்கிவிடக் கூடியவைதான்.

இந்த வாதங்களில் எந்த அளவு நியாயம் இருக்கிறது என்று பார்க்கலாம்.

இதற்கு முன்னால் இந்தியாவில் அழகிப் போட்டிகள் நடந்ததில்லையா, இப்போது மட்டும் எதிர்ப்பானேன்? சுஷ்மிதாவும், ஐஸ்வர்யாவும் ஜெயித்த போது கொண்டாடினீர்களே, இப்போது நம்மூரில் நடத்தினால் ஏன் எதிர்க்கவேண்டும்?

இதற்கு முன்பு எதிர்க்கவில்லை என்பதே தவறான கருத்து. எழுபதுகளிலிருந்தே அழகிப் போட்டியை இந்தியாவில் மாணவர் அமைப்புகளும், மகளிர் அமைப்புகளும் கண்டித்து வந்திருக்கின்றன. டெக்கியில் 'மிஸ் யூனிவர்சிடி', 'மிஸ் மிராண்டா' போட்டிகள் எதிர்ப்பின் விளைவாகக் கைவிடப்பட்டன.

சென்னையில் ராணி மேரி கல்லூரியில் அப்படியொரு போட்டி அறிவிக்கப்பட்ட உடனே எதிர்ப்பால் கைவிடப்பட்டது. எதிராஜ் கல்லூரியில் 'மிஸ் எதிராஜ்' போட்டி இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இருந்த எதிர்ப்புகளை விட இப்போது இன்னும் தீவிரமாக, இன்னும் கூடுதலாக எதிர்ப்பதற்குக் காரணம் - அரசாங்கம் தான். முதல் முறையாக இப்போதுதான் மத்திய அரசும், (கர்நாடக) மாநில அரசும் அழகிப் போட்டி ஏற்பாட்டில் பங்கேற்று, பகிரங்கமாக ஆதரவு காட்டுகின்றன. அரசாங்கத்தின் வேலை இது அல்ல. யாரோ தனியார், வர்த்தக ரீதியில் இப்படிப்பட்ட

கேவலங்களை நடத்தி வந்தபோது, எதிர்ப்பு தெரிவித்ததன் முக்கிய நோக்கம் மக்கள் விழிப்புணர்வு பெறுதலேயாகும். ஆனால் மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் அரசாங்கமே இப்போது அமிதாப் கம்பெனிக்குக் கூட்டாளி மாதிரி உதவுகிறது. எதிர்ப்பு கடுமையாகத் தேவைப்படுகிறது.

ஐஸ்வர்யாவும் சுஷ்மிதாவும் ஜெயித்தபோது கொண்டாடிவிட்டு இப்போது எதிர்க்கிறோமே என்பதும் நியாயமல்ல. அப்போது கொண்டாடியவர்கள் தான் இப்போது போட்டி நடத்துகிறார்கள்; ஆதரிக்கிறார்கள். இப்போது எதிர்ப்பவர்கள் யாரும் அப்போது அதைக் கொண்டாடியது கிடையாது. அப்போதும் மாணவர்களும் மகளிர் அமைப்புகளும் விமர்சனம் செய்தார்கள்.

உண்மை என்னவென்றால் ராஜீவ்காந்தி, நரசிம்மராவ் ஆட்சிகள் வரும்வரை இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துபவர்களே அடக்கி வாசித்தார்கள். சோஷலிச அணுகுமுறையை முழுவதுமாகக் கைகழுவி விட்டு மேல்தட்டு, பணக்காரர்களுக்கு மட்டுமாகப் பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்த காலகட்டத்தில் தான் இதையெல்லாம் நியாயப்படுத்துகிற போக்கும் தொடங்கியது. 1966ல் இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது இந்தியப்பெண் ரீட்டா உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் அவரை அப்போது யாரும் தேசியக் கொடியோடு ஊர்வலம் அழைத்து வரவில்லை. 1993ல் சுஷ்மிதா, ஐஸ்வர்யா காலத்தில் தான் இந்த மாற்றம் ஏற்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையோடு இரண்டறப் பிணைந்திருப்பது புதிய 'அழகு'க் கொள்கை.

கடந்த ஐந்தாண்டுகளில் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உணவுப் பொருட்களின் விலைகளெல்லாம் பல மடங்கு ஏறிக்கொண்டே சென்றுள்ள நிலையில், இந்திய அரசாங்கம் ஒப்பனைப் பொருட்களுக்கான எக்சைஸ் வரிகளை 120 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகக் குறைத்து வந்திருக்கிறது. இன்று இந்தியாவில் ஒப்பனைப் பொருட்கள் விற்பனை மதிப்பு 1200 கோடி ரூபாய். பல பன்னாட்டு நிறுவனங்கள் இங்கே வந்து இறங்கியிருக்கின்றன. அவர்களுடைய விளம்பரங்களுக்கான அவசியத் தேவை - அழகிப் போட்டியும் அழகு பற்றிய கனவுகளும்.

*அழகுப் போட்டியில் இப்போது அறிவுக்கும் முக்கியத்துவம் இருக்கிறதே, அப்படியானால் அதை ஆதரிக்கலாமே?*

அறிவுக்கும் முக்கியத்துவம் உண்டு என்பதே ஒரு பொய்; ஒரு நாடகம்; ஒரு பாவனை அவ்வளவுதான். பல்வேறு சுற்றுகளில்

மதிப்பிடப்படுவதெல்லாம் இடுப்பு, மார்பு, தொடை, கால், மூக்கு, உதடு இவற்றின் ‘அழகு’தான். கடைசிச் சுற்றில் ‘நீதிபதி’கள் கேட்கும் கேள்விக்கு பதில் கூறுவதில் தான் ‘அறிவு’ மதிப்பிடப்படுகிறது. இதிலும் கூட எந்த மாதிரி கேள்விக்கு எந்த விதமான பதில் கூறுவது என்பதற்கு ‘கோச்சிங்’ தரப்படுகிறது. அமைப்பாளர்கள் விரும்பக் கூடிய பதிகள் எவை என்று பட்டியலிடலாம்.

அறிவுக்கும் இந்த போட்டிக்கும் தொடர்பில்லை என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு போதும். ‘அழகி’ப் பட்டத்தை வெல்பவர் அடுத்த ஓராண்டுக்கு ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் விளம்பர மாடலாக இருந்தாக வேண்டும் என்பது நிபந்தனையாகும். 1996ம் வருட ‘மிஸ் யூனிவர்ஸ்’ பட்டம் பெற்ற அலிசியா வெனிசுலா நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் ‘அழகி’ப் பட்டம் வென்ற சில மாதங்களில் எடை 8 கிலோ அதிகமாகி விட்டது. பழையபடி 51 கிலோ எடைக்கு அவர் திரும்பாவிட்டால், ‘அழகி’ப் பட்டமும் விளம்பர ஒப்பந்தங்களும் ரத்தாகிவிடும் என்று இப்போது கூறப்படுகிறது. அவருடைய எடை மாறாமல் இருந்து, ‘அறிவு’ அடுத்த சில மாதங்களில் மாறியிருந்தால், என்ன செய்யப்படும் என்றெல்லாம் நிபந்தனை எதுவும் கிடையாது. இந்தப் போட்டிகளின் உண்மையான நோக்கம் தங்கள் விளம்பரங்களுக்குப் பெண்களைக் கவர்ச்சியாகப் பயன்படுத்திக் கொண்டு மார்க்கெட்டை விரிவுபடுத்துவது மட்டும் தான். அதை மறைக்கப் பல உத்திகள் கையாளப்படுகின்றன.

*அழகிப் போட்டி பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கிறதே, இதில் என்ன தவறு?*

அசல் நோக்கத்தை மறைக்கும் பிரசார உத்திகளில் இதுவும் ஒன்று. எந்தப் பெண்ணுடைய தன்னம்பிகையை அழகிப் போட்டி வளர்க்கிறது? அதில் பங்கேற்கும் 88 பேருடைய தன்னம்பிக்கையையாவது அது வளர்ப்பதாகப் பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும், அதன் செலவு என்ன? பத்து கோடி ரூபாய். தன்னம்பிக்கையை வளர்க்க எவ்வளவு விநோதமான விலையுயர்ந்த வழி?!

யதார்த்தம் என்ன? ‘பசிஃபிக் குயின்’ என்ற அழகிப் பட்டம் பெற்ற பிலிப்பைன்ஸ் ‘அழகி’ நெலியா சாங்கோ தற்போது ஆசிய பெண்களின் மனித உரிமைக் குழுவின் அமைப்பாளராக இருக்கிறார். ‘அழகி’ப் போட்டியில் ஜெயித்த உடன் விளம்பர நிறுவனங்களுக்காக ஓராண்டு காலம் ஊர் ஊராக அவரும் செல்ல வேண்டியதாயிற்று. “எல்லா இடங்களிலும் என்னிடம் பேச ஆளில்லை; பார்த்து சிரிப்பார்கள், அத்தோடு சரி. என்னை மூளையுள்ள நபராக யாரும் எங்கும் மதிக்கவே

இல்லை. அறையை அலங்கரிக்கிற ஒரு பொம்மையாகவே ஒவ்வொரு விருந்திலும் நான் பயன்பட்டேன். என் ஒரே வேலை ஏதாவது ஒரு பண்டத்தை விளம்பரம் செய்ய போஸ் தருவதுதான்'' என்று நெலியா தெரிவித்திருக்கிறார். அழகைப் போற்றுவது இந்தப் போட்டியின் நோக்கமல்ல; அழகை வியாபாரமாக்குவதுதான் என்று நெலியா தெளிவுபடுத்தியிருக்கிறார். அந்தக் கவர்ச்சி உலகத்தை உதறி எறிந்து விட்டு வந்து இப்போது போராடும் பெண்கள் அமைப்பில் செயல்பட்டு வருகிறார்.

சரி, வேறு யாருக்கு இந்த 'அழகி'ப் போட்டியால் தன்னம்பிக்கை ஏற்படுகிறது? டி.வி.யிலும் பத்திரிகைகளிலும் இவற்றைப் பார்க்கிற சாதாரண ஏழை, நடுத்தர வகுப்புப் பெண்களுக்கா? 'எது அழகு' என்பது பற்றிய தவறான கருத்துகள்தான் அவர்கள் மனங்களில் விதைக்கப்படுகின்றன. சிவப்பழகு க்ரீம் பயன்படுத்தி எப்படியாவது சிவப்பாகி விடவேண்டும் என்று ஆசைப்பட்டு தன் சொற்ப வருவாயில் க்ரீம் வாங்கிக் கொண்டிருந்தாள் எங்கள் வீட்டு வேலைக்காரப் பெண். கறுப்பாகவும் அழகாகவும் இருந்த அவளை இந்த மயக்கத்திலிருந்து வெளிவரச் செய்ய எங்களுக்கு ஓராண்டு காலம் ஆயிற்று.

எப்படியாவது ஒல்லியாக அழகாக இருக்க வேண்டும் என்ற தவிப்பில் ஒழுங்காக உணவு உண்ணாமல் நோய்வாய்ப்படும் இளைஞிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பெங்களூரில் உள்ள மனநல மருத்துவமனையான நிம்ஹான்சுக்கு வருடத்துக்கு ஓரிரு கேஸ்கள் வந்த நிலை மாறி இப்போது மாதத்தில் 5 கேஸ்கள் இப்படி வருவதாக 'இந்தியா டுடே' தெரிவித்திருக்கிறது. கன்னத்தில் குழி விழுவதற்கு, பெரிய மார்பகத்துக்காக, சிறிய இடுப்புக்காக, கூரான மூக்குக்காக என்று செயற்கை அறுவை சிகிச்சை கிளினிக்குகள் இந்தியாவில் அதிகரித்து வருகின்றன. இந்த மாதிரி 'அழகு'க்காகத் தங்கள் ஆரோக்யத்தைக் கெடுத்துக் கொள்ளும் கேஸ்கள் அதிகமாகி வருவது ஐந்தாண்டுகளாகத்தான்.

தன்னம்பிக்கை யாருக்காவது அதிகரித்திருந்தால் அது 'அழகு'ப் பொருட்களை விற்பனை செய்யும் கம்பெனிகளுக்கு மட்டும் தான். அரசு ஆதரவுடன் 'அழகி'ப் போட்டி நடத்துவதால் தங்கள் விற்பனை மார்க்கெட் வேகமாக வளரும் என்ற தன்னம்பிக்கை!

*உலக அழகிப் போட்டி சமத்துவத்தை வளர்க்கிறதே, நல்லது தானே?*

சமத்துவமா? போட்டியிடும் 'அழகி'களுக்குள்ளேயே சமத்துவம் கிடையாது. பெங்களூருக்கு வந்த பெண்களிலேயே வெள்ளைத்தோல் பெண்களை மீடியா கவனித்த அளவுக்குக் கறுப்புத்தோல் பெண்களைக்

கவனிக்கவில்லை என்று அவர்களே வருத்தப்பட்டிருக்கிறார்கள். கறுப்பு, பழுப்பு நாடுகளின் பெண்கள் ‘அழகி’ப்போட்டிகளில் வெற்றி பெறுவதற்கும் அந்தந்த நாடுகளில் பொருளாதாரம் தாராளமாக்கப்படுவதற்கும் தொடர்பு இருந்துவருகிறது.

தவிர, இந்த ‘அழகி’ப் போட்டியில் வெல்லும் ‘அழகி’களின் வாழ்க்கையே அடிமை வாழ்க்கைதான். ஜனவரியில் ஃபெமினா ‘அழகி’யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராணி ஜெயராஜ் பத்து மாதங்களாகத் தன் எடையை சீராக வைக்க சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஓயாமல் விளம்பரப் பயணங்கள். கடைசியில் இரண்டு உணவியல் நிபுணர்களிடம் ராணி அனுப்பப்பட்டார். இருவரும் எதிரெதிர் யோசனைகளைச் சொன்னார்கள். பின்பற்றியாக வேண்டிய கட்டாயம் ராணிக்கு. ஏனென்றால் ஒப்பந்தம் போட்டாகிவிட்டது. புளியமரம் ஏறித்தான் ஆகவேண்டும்.

அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற பின் ஓராண்டுக்கு மாடலிங் செய்யும் போது கிடைக்கும் தொகையில் 20 சதவிகிதம் மட்டும்தான் ‘அழகி’க்குக் கிடைக்கும். 80 சதவிகிதம் விளம்பர நிறுவனத்துக்கும் போட்டியை நடத்திய கம்பெனிகளுக்கும் போய்விடும்.

சினிமாவிலும் டி.வி.யிலும் இல்லாத ஆபாசமா இதில் இருக்கிறது? அதையெல்லாம் முதலில் எதிர்க்கட்டுமே! பெண்களுக்கு எதிரான வரதட்சிணைக் கொடுமை, பலாத்காரம், சிசுவதை இதற்கெல்லாம் போராடாமல் இதை வந்து எதிர்ப்பானேன்?

ஆடு நனைவது பற்றி ஓநாய்கள் அழுத கதைதான் இந்தக் கேள்வி. பெண்கள் மீதான எல்லா கொடுமைகளையும் எதிர்த்துத் தொடர்ந்து மகளிர் அமைப்புகளும் சமூக அக்கறையுள்ளவர்களும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பன்வாரி தேவி ’கற்பழிப்பில்’ நீதிபதிபதி உத்தரவு பற்றியும், ரூப்கன்வார் எரிப்பு வழக்கில் நீதிமன்ற உத்தரவு பற்றியும், சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி விவகாரங்கள் காலத்திலும் கவலைப்பட்டது இல்லை.

சினிமா, டி.வி., பத்திரிகைகள் முதலியவற்றில் வரும் பெண்ணடிமைக் கருத்துகளுக்கும், சமூகத்தில் பெண்ணுக்கு நடக்கும் கொடுமைகளுக்கும், அழகிப் போட்டிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று கூற முடியாது. எல்லாம் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன.

ஒரு பெண்ணை அழகி என்று பட்டம் சூட்டும் அணுகுமுறை அழகு பற்றிய கருத்துகளை சமூகத்தில் பரப்புகிறது. அதன் தொடர்ச்சியாக பெண் குழந்தைக்குக் கல்வி முக்கியமா, அழகு முக்கியமா, ‘அழகில்லாத பெண்ணுக்கு அதிக வரதட்சிணை கேட்கலாமா’,

*பெண்ணின் 'அழகு' ஆணுக்குப் பயன்படும் விதம் என்ன? ஆணைக் கவர்கிற 'அழகை' அனுபவிக்க அவன் பலாத்காரத்தில் ஈடுபடத் துணியுமளவு கிளர்ச்சியூட்டப்படுதல் எப்படி என்று எல்லாமே தொடர் சங்கிலியாக சம்பந்தப்பட்டிருக்கின்றன. எனவே வேறு எதையாவது போய் எதிர்த்துக் கொள், இதை விட்டு விடு என்பது வெறுமே திசை திருப்புகிற வேலையாகும். தவிர முன்னெப்போதையும் விட இந்த அழகிப் போட்டி அரசு ஆதரவுடன், பத்திரிகை, டி.வி. பின் பலத்துடன் அதிகமான மக்கள் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படுபோது - அதன் ஆபத்துகளையும் எடுத்துச் சொல்லாமல் ஒதுங்கியிருக்க முடியாது.*

*இந்திய கலாச்சாரத்தையும் அதன் நவீன வளர்ச்சியையும் உலகுக்கு எடுத்துக்காட்ட இது நல்ல வாய்ப்பு இல்லையா?*

*இல்லை. ஒலிம்பிக்ஸ் விளையாட்டிலோ, ஆசிய விளையாட்டிலோ, நம்முடைய சாதனைகள் செய்யப்பட்டால் நாம் யார் என்று உலகுக்குத் தெரியும். உலகளவில் நடக்கும் விஞ்ஞானிகள் மாநாட்டில் இந்திய விஞ்ஞானிகளின் சிந்தனை பளிச்சிட்டால் நம்மை உலகம் அறிந்து கொள்ளும். கம்ப்யூட்டர் வளர்ச்சியிலோ, விண்வெளிச் சாதனைகளிலோ நமது பங்கு என்ன என்பதே முக்கியம். உலகத்தின் பிறபகுதிகளில் அறவே ஒழிக்கப்பட்ட நோய்களை நாமும் இங்கே ஒழித்து விட்டோம் என்றால் அது நம் உலக சாதனை.*

*இந்தியாவில் 4 கோடி பேர் உடலில் மஞ்சள் காமாலைக் கிருமி தொற்றியிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தொற்றிலிருந்து காப்பாற்ற புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமாவது தடுப்பூசி போடத் தேவைப்படும் பணம் ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் (உலக சுகாதார நிறுவனம் 900ரூபாய் மருந்தை 90 ரூபாய் சலுகை விலையில் தருவதால் இந்தக் கணக்கு). ஆனால் அரசு தடுப்பூசித் திட்டத்துக்கு ஒதுக்கும் மொத்தத் தொகையே 75 கோடி ரூபாய் தான் என்கிறது 'அவுட்லுக்' இதழ்.*

*தென்கிழக்காசியாவில் 85 சதவிகித மலேரியா கேசுகள் இருப்பது இந்தியாவில்தான். 1995ல் மட்டும் 28 லட்சம் பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது 'சண்டே' இதழ். இதன் தொகுப்புப்படி உலகின் மொத்த தொழு நோயாளிகளில் 60 சதவிகிதம் பேர் (20 லட்சம்) இருப்பது இந்தியாவில் தான். காச நோயாளிகள் மொத்தம் ஒரு கோடியே 40 லட்சம் பேர். வருடத்துக்கு 5 லட்சம் பேர் காச நோயால் செத்துப் போகிறார்கள்.*

*ஆனால் நம் நிலை என்ன? உலகப் பெண்களுக்கு 'அழகி'ப் போட்டி நடத்த இடம் கொடுத்தது. அதில் தேர்வாகும் அழகிகளை*

விளம்பர கம்பெனிகள் தம் பொருட்களை விற்க உபயோகிப்பதற்கு உதவி செய்வது தான் நம் சாதனை என்று ஆகிவிட்டால் - அது எந்தத் துறைக்கான சாதனையாக இருக்கும்? தமிழில் 'பிம்ப்' என்ற சொல்லுக்குச் சரியான கண்ணியமான சொல் இல்லை என்பது வருத்தமாயிருக்கிறது. 'பிம்ப்பிங்'கில் சாதனை செய்து எப்படி நம் கலாச்சாரத்தைப் பறைசாற்ற முடியும்?

அழகிப் போட்டி வருவாயிலிருந்து மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் சங்கத்துக்கு நன்கொடை தரப்படுவது நல்ல விஷயம் இல்லையா?

இதுவும் ஏமாற்று வேலை தான்.

அமிதாப் பச்சன் கார்ப்பரேஷன் நிகர லாபமாக சுமார் இரண்டு கோடி ரூபாய்களை எதிர்பார்க்கிறது. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான நன்கொடை தரப்படுவது 'சாரிடி பால்' (சிலீணீக்ஷீவீமீஹ் நிணீறீறீ) எனப்படும் 'அழகியர் பங்கேற்கும் விருந்துக்கான கட்டண வருவா-யிலிருந்து தான். இது சில லட்சங்கள் மட்டுமேயாகும். இதைத் திரட்டித்தர அழகிப் போட்டி தேவையில்லை. அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் ஏற்கெனவே டி.வி., சினிமா தயாரிப்புகளில் பலகோடி ரூபாய் லாபம் ஈட்டி வருகிறது. அதிலிருந்தே விரும்பினால் நன்கொடை கொடுத்துவிடலாம். அம்மாவை விபசாரத்துக்கு அனுப்பிவை; குழந்தைக்குச் சோறு போட்டுவிடுகிறேன்' என்று பேரம் பேசுவது போன்ற நன்கொடைகள் பொய்யானவை.

அரசியல் 'சூப்பர் ஸ்டார்' ரஜுனிகாந்த், இசை'ஞானி' இளையராஜா, 'சமூக சேவகி' ரேவதி, 'இசைமேதை' எல்.சுப்பிரமணியம் என்று பலரும் இதில் கலந்து கொள்கிறார்களே, ஏன்?

இதில் ஆச்சரியப்பட ஏதும் இல்லை. இவர்கள் எல்லாருமே தம் துறைகளில் திறமைசாலிகள். திறமை வேறு. சமூகப் பிரக்ஞை வேறு. ரஜினியும் இளையராஜாவும் பெண் பற்றிய மரபான பார்வையைப் பின்பற்றுகிறவர்கள். பெண் தாய் - தெய்வம். தொழப்படவேண்டியவள். பெண் ஒரு போகப் பொருள். துய்க்கப்படவேண்டியவள். இது தான் மரபான பார்வை. ரஜினி படங்களில் இதைப் பார்க்கலாம். ராஜாவின் பாடல்களில் இதைப் பார்க்கலாம். (அம்மா என்றழைக்காத, 'வாடி என் கப்பக்கிழங்கே')

அழகிப் போட்டி முடிந்ததும் பெங்களூரிலிருந்து அநேகமாக அவர்கள் கொல்லூருக்கு மூகாம்பிகை தரிசனத்துக்குச் சென்றாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ரேவதி, எல்.சுப்பிரமணியம், பிரபுதேவா, பானுப்பிரியா, வினீத், வட, தென், கிழக்கு, மேற்கு இந்திய நடிகர்கள் என்று பலரும் சென்று கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் நம் மரபுதான்.

அதுதான் 18-ம் நூற்றாண்டு பண்ணையார் - தாசி நிலப்பிரபுத்துவ மரபு.

பழைய பண்ணையார்கள் கோவில் திருவிழா நடத்தி முதல் மரியாதை பெற்றுக் கொண்டு, பொட்டுக் கட்டினவர்களை ஆடவிட்டு ரசித்து, மற்ற ஊர்களிலிருந்து வந்திருக்கிற சக மிராசுகளுடன் உல்லாசமாகப் பொழுது போக்கினார்கள். இசை ஞானிகளான நாதஸ்வர மேதைகளும், தப்பாட்டக்காரர்களும் 'சமூகத்தின்' மனம் குளிரக் கலை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அதே காட்சி தான்.

மறுபடியும்

இப்போதும் அரங்கேறுகிறது.

வடிவங்கள் மட்டுமே மாறியிருக்கின்றன. சாராம்சம் மாறவில்லை.

எல்லா எதிர்வாதங்களையும் பார்த்துவிட்டோம். எவ்வளவு மூடி மறைத்தாலும் விதவிதமாக மேற்பூச்சு பூசினாலும் அடிப்படை உண்மைகளை மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

அழகிப் போட்டி என்பது அடிப்படையில் பெண்ணின் உடலை வைத்து முடிவு செய்வதுதான். கவர்ச்சியான பெண் உடலைப் பயன்படித்திப் பண்டங்களை விற்பதுதான் இதன் ஒரே நோக்கம். பெண் ஆணுக்கு போகப் பொருளாகப் பயன்படுபவள் என்று பல நூற்றாண்டுகளாக உருவாகி வந்துள்ள அடிமை முறைதான் இதற்கு இன்னும் ஆதார சக்தியாக விளங்குகிறது. இதில் நவீனமோ, முன்னேற்றமோ ஏதும் இல்லை.

பல நூற்றாண்டு அடிமைச் சிந்தனைகளை ஒரே நூற்றாண்டில் மாற்றிவிட முடியாதுதான். ஆனால் மறுபடியும் மாற்றம் வர வேண்டுமானால் 21-ம் நூற்றாண்டுக்குப் போவதற்கு முன்னால் - இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் உணர்வை எட்டியாக வேண்டும்.

மறுபடியும்

***தினமணி கதிர்***
***21.11.1996***